## <u>கம்பம் நகராட்சி</u>

**2018–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் (13.02.2018) செவ்வாய் கிழமை முற்பகல் 11.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

### கூட்டப் பொருட்கள்

| | |
|---|---|
| **1.** | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 1/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | நகராட்சி பொறியாளர் அவர்களின் 1/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **3.** | கம்பம் நகராட்சிப் பகுதியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/தே.பொ.1, நாள்:19.10.2017, 07.12.2017 மற்றும் 13.12.2017 ஆகிய கடிதங்களில் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி வரைவு மறுவரையறை கருத்துருக்கள், படிவங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியவை தயார் செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.1380, நாள்:15.12.2012 அன்று நகர் மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. வரைவு மறுவரையறை உத்தேசங்கள் மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேற்படி, வரைவு மறுவரையறை உத்தேசங்கள் தொடர்பாக கடந்த 12.01.2018–ஆம் தேதி வரை ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து 12 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பாக மண்டல வாரியான ஆய்வுக்கூட்டம் மதுரையில் 06.02.2018 அன்று நடைபெற்றது. பெறப்பட்ட ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகளில் 12 மனுக்களும் வழிகாட்டுதலுக்கு முரணாக இருந்ததால் நிராகரிக்கப்பட்டது. தற்போது தயார் செய்யப்பட்டுள்ள உத்தேசங்கள் உறுப்பினர் செயலர் மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/இஜி1, நாள்:31.01.2018–ஆம் தேதிய கடிதத்தின்படி உரிய வழிகாட்டுதலின்படி தயார் செய்யப்பட்டுள்ளது. கம்பம் நகராட்சியின் 33 வார்டுகளுக்கான மறுவரையறை கருத்துக்கள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு மாநில மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு:** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.**2629/2017**/பி1) |

**4.** இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண். டி.என். **60 X 0499** வாகனத்திற்கு காப்பீடு காலம் **10.02.2018** தேதி முதல் புதுப்பிக்க வேண்டி உள்ளது. மேற்படி வாகனத்திற்கு கம்பம் ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி (பி) வாகன காப்பீட்டு நிறுவனத்திற்கு காப்பீடு புதுப்பிப்பு கட்டணம் ஒரு ஆண்டு காலத்திற்கு ரூ.10,162/—ஐ (ரூபாய் பத்து ஆயிரத்து நூற்று அறுபத்து இரண்டு மட்டும்) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு — 1)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி ஆணையர் / தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 336 /2018/இ1)

**5.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1390, நாள்.15.12.2018 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 08.02.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடு ரூ.** | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்.** | **கூடுதல் %** | **குறைவு %** |
|---|---|---|---|---|---|
| 1 | கம்பம் நகாட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தினை செயல்படுத்த நியமிக்கப்பட்டுள்ள பரப்புரையாளர்கள் (Animators) மற்றும் மேற்பார்வையாளர்களுக்கும் (Supervisers) நகர்மன்றக் கூடம் அருகில் அலுமினிய தடுப்பு கொண்டு அறை மற்றும் குழாய் பொருத்துனர்களில் அறையிளல் அலுமினிய தடுப்பு அமைக்கும் பணி. | 75,000/— | வி.கிருஷ்ணன், கம்பம் | — | 0.03 |
| | | | எல்.இராஜேந்திரன், கம்பம் | 0.16 | — |

**அலுவலகக் குறிப்பு** : — 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட திரு வி.கிருஷ்ணன், கம்பம் அவர்கள் 0.03 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1155/2017/இ1)

| | | |
|---|---|---|
| 6. | கம்பம் நகர் மன்றத்தின்15.12.2017ஆம் தேதிய தீர்மானம் எண்.13–ல் நிர்வாக அனுமதி அளித்துள்ளதன்படி நகராட்சி நடுநிலைப்பள்ளி (சுங்கம்)க்கு முகைதீன் ஆண்டவர் புரத்தில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பள்ளி கட்டிடம் கட்ட மின்னனு ஒப்பந்தப்புள்ளியினை தேனி மாவட்டம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலரின் வெளியீட்டு ஆணை எண்.809/ஒப்பந்தப்புள்ளி/விளம்பரம்/201, நாள்.23.01.2018 வழியாக தினபூமி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் பட்டியலின்படி விளம்பர கட்டணம் ரூ.14213/– (ரூபாய் பதினான்கு ஆயிரத்து இருநூற்று பதிமூன்று மட்டும்) நாளிதழ் நிறுவனத்திற்கு கல்வி நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2306/2017/இ1) |
| 7. | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருந்து சேகரமாகும் குப்பைகள் அனைத்தும் இந்நகராட்சிக்குச் சொந்தமான கம்பம்–கூடலூர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள புதிய உரக்கிடங்கில் குப்பை கழிவுகள் தேங்கி மேடாகி வருகிறது. மேற்படி உரக்கிடங்கில் Processing Unit, Machine மற்றும் அதற்குரிய கூரை (Roof) அமைக்கப்பட்டு உள்ளதால், நகராட்சி வாகனங்கள் குப்பை கழிவுகளை உள்ளே சென்று கொட்டுவதற்கு இடவசதி பற்றாக்குறையாக உள்ளதாலும், ஒரே இடங்களில் மறுபடியும் கொட்டுவதாலும் குப்பை கழிவுகள் தேக்கம் ஏற்படுகிறது. எனவே மேற்காணும் உரக்கிடங்கில் தேவைப்படும் நேரங்களில் ஜேசிபி மற்றும் கிட்டாட்சி (HITACHI) மூலம் குப்பை கழிவுகளை ஒதுக்கி சமப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு, ஒரு மாதத்தில் வாரத்திற்கு ஒருநாள் வீதம், ஒரு மாதத்திற்கு நான்கு நாட்கள் பணிகளை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/– க்கு (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு**: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.**482/2018/எச்1**) |
| 8. | இந்நகராட்சிக்குச் சொந்தமான டம்பர் பிளேசர் வாகனம் TN 60 T 4504 டம்பர் பிளேசர் லாரிக்கு கிளர்ச் பிளேட், கவர் அசெம்பிள், ரிலீஸ் பேரிங் மற்றும் அசெம்பிளி சிளர்ச்சி கிட் மேல்கிட், கீழ்கிட் பழுதடைந்துவிட்டது. எனவே மேற்படி பழுதினை சரிசெய்வதற்கு ஆகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.**30,000**/- (ரூபாய் முப்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு: 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். |

**9.** இந்நகராட்சி குடிநீர் திட்டநிதி 2017–18ன் கீழ் குடிநீர் விநியோகம் செய்யும் டிராக்டர் டிரைலர் TCU 9769–க்கு உரிய பழுது பார்க்கும் பணிகள் செய்திட நகர் மன்ற தீர்மான எண். 1394 நாள்.31.01.2018–ல் அனுமதிக்கப்பட்டதின் படி 09.02.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின் வருமாறு.

| **வ.எண்.** | **நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி** | **மதிப்பீட்டு விலை விகிதம் ரூ** |
|---|---|---|
| 1 | ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ்,<br>நகராட்சி அலுவலகம் எதிரில் ,<br>கம்பம். | 51700.00 |
| 2 | தரணி டிங்கரி ஒர்க்ஸ்,<br>குமுளி மெயின் ரோடு,<br>கம்பம் | 52300.00 |
| 3 | ஓம் சக்தி ஆட்டோ மொபைல்ஸ்,<br>மெயின் ரோடு,<br>கம்பம். | 52900.00 |

**<u>அலுவலகக்குறிப்பு.</u>**

அ) மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ், கம்பம். நிறுவனத்தார் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

இ) குடிநீர் பணியின் அவசரம் அத்தியாவசியம் கருதி இப்பணிக்கு தனி அலுலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.337/2018/இ2)

**10.** இந்நகராட்சி ஈப்பு பதிவு எண். டி.என். 60 **V** 2194 வாகனத்தில் ஏற்பட்ட சிறு பழுது மற்றும் உதிரி பாகங்கள் மாற்றி மராமத்து பணிகள் செய்திட உத்தேச செலவினம் ரூ.17000/–க்கு (ரூபாய் பதினேழு ஆயிரம் மட்டும்) உள்ளூர் விலைப்புள்ளி கோரியத்தில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | சிறு பழுது மற்றும் உதிரி பாகங்கள் மாற்றி மராமத்து பணி செய்வதற்கான விலை<br>ரூ. |
|---|---|---|
| 1 | A.K.S All Car Service,<br>Opp Thangam Steels,<br>Kumuli road, Cumbum | 16,250/–<br>(ரூபாய் பதினாறு ஆயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) |
| 2 | A.M Motors,<br>Opp State Bank of India.,<br>Main Road,<br>Cumbum | 16,550/–<br>(ரூபாய் பதினாறு ஆயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்) |

**அலுவலகக் குறிப்பு:** 1) உத்தேச செலவினத்திற்கும் மற்றும் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள உரிமையாளர், A.K.S All Car Service, Opp Thangam

Steels, Kumuli road, கம்பம் என்பவரது விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**11.** சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ், **22** வார்டுகளில் தனியார் மூலம் துப்புரவு பணிகள் செய்வதற்கு **21.02.2018** –ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்த விதிகளின்படி தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை வழியாக நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு இயக்குநர், Accord Advertising Agencies, சென்னை அவர்கள் மூலம் DIPR/193/TENDER/2018 Dated.16.01.2018 ன்படி விளம்பரக் கட்டணத் தொகைக்கு பில் வரப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிறுவனத்திற்கு விளம்பரக்கட்டண தொகை ரூ.86,625/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 1308/2017/எச்1)**

**12.** இந்நகராட்சி பகுதிகளில் உள்ள சமுதாயக் கழிப்பிடங்கள், பொதுக் கழிப்பிடங்களில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அடையாள எண் உள்ளடக்கிய விபர பலகை பொருத்துவதற்கு **24.01.2018–**ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் பின்வருமாறு வரப்பெற்றது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | விலைவிகிதம் (போர்டு ஒன்றுக்கு வரிகள் உள்பட) ரூ. |
|---|---|---|
| 1. | Thiru.B. Manikandan, Founder<br>Head Trust, Humanity Egalitraian afford Development Trust, Administrative Office,<br>Annai Indra Street, MGR Nagar, Theni | 600/-<br>(ரூபாய் ஆறுநூறு மட்டும்) |
| 2 | Thiru.K. Dhanapaul<br>56A, South Bazar, Palayam Kottai<br>Thirunelveli | 700/-<br>(ரூபாய் ஏழுநூறு மட்டும்) |
| 3 | Thiru.M. Murugan<br>No.1 Kodi Mangalam,<br>Kodi Mangalam (Post)<br>Madurai | 840/-<br>(ரூபாய் எண்ணூற்று நாற்பது மட்டும்) |

**அலுவலகக் குறிப்பு:** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Thiru. B.Manikandan, Founder HeadTrust, Theni விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 139/2017/எச்1)**

| | |
|---|---|
| **13.** | இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் தூய்மை இந்தியா திட்டம், சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் உள்கட்டமைப்பு பணிகள் 80 சதவிகிதம் முடிவுற்றுள்ளது. உரங்கிடங்கில் உள்ள பணியாளர்கள் கழிப்பறை மிகவும் மோசமாக பாழடைந்த நிலையில் உள்ளதால் உரக்கிடங்கில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பையினை தரம் பிரிக்கும் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு கழிப்பறை மற்றும் பணியாளர்கள் ஓய்வு அறை அமைக்கப்பட வேண்டி உள்ளது. மேற்படி பணிக்கு ரூ.3,50,000/–(ரூயாய் மூன்று லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்)க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு** – அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1155/2017/இ1) |
| **14.** | இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் உள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள மின்மோட்டார் அடிக்கடி பழுதாவதால் மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிப்பு செய்ய தண்ணீர் பற்றாகுறை ஏற்படுகிறது. ஆதலால், உரம் தயாரிப்பு கலத்தினை சுற்றிலும் குழாய் அமைக்கவும், ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் அமைத்து உரம் தயாரிப்பு கலத்திற்கு தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு ரூ.1,50,000/–(ரூயாய் ஒருலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்)க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு** – அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1155/2017/இ1) |
| **15.** | இந்நகராட்சியில் தற்போது 2287 தெருவிளக்குகள், 124 மின் இணைப்புகள் மூலம் இணைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுவந்தது. இந்நிலையில் மின் வாரியத்தினர் நகரில் 105–க்கும் மேற்பட்ட இடங்களில் புதிய மின்மாற்றிகள் நிறுவியதால், தெருவிளக்குகளை அதற்கு தகுந்தவாறு அந்தந்த மின்மாற்றிகளில் உள்ள தெருவிளக்குகளை எரிய செய்திடபுதியதாக தனி மின்இணைப்பு 112 எண்ணம் அமைக்கப்பட்டது. மேற்படி புதியதாக பெறப்பட்ட தெருவிளக்கு மின் இணைப்புகளில் இணைக்கப்பட்ட விளக்குகளை எரிய செய்திட தானியியங்கி நிறுத்திகள் பொருத்தி இயக்கிடவும், ,இதனால் நகராட்சி மின் சிக்கன சேமிப்பு ஆவதுடன். மின் கட்டணமும் வெகுவாக குறையும் என்பதாலும் வார்டு எண். 1 முதல் 22 முடிய மொத்தம் 57 இடங்களில் உள்ள தெருவிளக்கு மின் இணைப்புகளில் தானியியங்கி நிறுத்திகள் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 4,70,000/–க்கு (ரூபாய் நான்கு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு–**<br>தெருவிளக்கு பராமரிப்பின் அவசியம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதியும் மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2017/இ2) |

| | |
|---|---|
| **16.** | இந்நகராட்சியில் தற்போது 2287 தெருவிளக்குகள், 124 மின் இணைப்புகள் மூலம் இணைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுவந்தது. இந்நிலையில் மின் வாரியத்தினர் நகரில் 105—க்கும் மேற்பட்ட இடங்களில் புதிய மின்மாற்றிகள் நிறுவியதால், தெருவிளக்குகளை அதற்கு தகுந்தவாறு அந்தந்த மின்மாற்றிகளில் உள்ள தெருவிளக்குகளை எரிய செய்திடபுதியதாக தனி மின்இணைப்பு 112 எண்ணம் அமைக்கப்பட்டது. மேற்படி புதியதாக பெறப்பட்ட தெருவிளக்கு மின் இணைப்புகளில் இணைக்கப்பட்ட விளக்குகளை எரிய செய்திட தானியியங்கி நிறுத்திகள் பொருத்தி இயக்கிடவும், ,இதனால் நகராட்சி மின் சிக்கன சேமிப்பு ஆவதுடன். மின் கட்டணமும் வெகுவாக குறையும் என்பதாலும் வார்டு எண். 23 முதல் 33 முடிய மொத்தம் 55 இடங்களில் உள்ள தெருவிளக்கு மின் இணைப்புகளில் தானியியங்கி நிறுத்திகள் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 4,55,000/—க்கு (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பத்தி ஐயாயிரம் மட்டும்) மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு—**<br>தெருவிளக்கு பராமரிப்பின் அவசியம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதியும் மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2017/இ2) |

**ஒப்பம்/— திரு ந.சங்கரன்,**
ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,
கம்பம் நகராட்சி.

நாள்.**13.02.2018**
இடம். கம்பம்